DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.10/2025**

Prosecution **PW.2**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | நீலமேகம் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | வையாபுரிகவுண்டர் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 63 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.06.2025

1 முதல் 5 எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கிருஷ்ணராயபுரம் நத்தமேட்டில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மல்லிகா எனது தம்பி பாலசுப்பிரமணியன் மனைவி ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்குத்தெரியும் எனக்கு உறவினர்கள் தான். எங்களுக்கும் ஆஜர் எதிரிக்கும் நிலம் சம்பந்தமான பிரச்சனை இருந்து வருகிறது. தோட்டத்தில உள்ள வீட்டிலிருந்து வழக்கம்போல் வீட்டை பூட்டை விட்டு ஊரில் உள்ள வீட்டிற்கு வந்துவிடுவது வழக்கம். 26.12.2020ம் தேதி காலை 06.30 மணியளவில் நான், மல்லிகா அ.சா.1, வளர்மதி, ஆகியோருடன் தோட்டத்து வீட்டிற்கு சென்று போய் பார்த்த போது அங்கு ஜெகதிசன், மேனகா, மற்றும் ஆஜர் எதிரிகளும் வீட்டில் இருந்த பூட்டை அறுத்து அங்கிருந்த சாமான்கள், உரம், கோரை, நெல், சிலிண்டர், கேஸ் அடுப்பு, ஆகியவற்றை தூக்கி வெளியே போட்டிருந்தனர்.

2. ஆஜர் எதிரிகளிடம் நான் ஏன் வெளியே தூக்கி போட்டிள்ளீர்கள் என்று கேட்டேன். ஆஜர் எதிரி ஜெகதிசன், மேனகா மற்ற 3 எதிரிகளும் எங்களுக்கும் வீடு சொந்தம் என்று சொல்லி அரிவாள் எடுத்து வெட்டவந்தார்கள். வீடு எனக்குத்தான் சொந்தம் என்று நான் கூறினேன். நான் எனக்கு கட்சியில் கொடுத்த பசுமை வீடு என்றும் கூறியபோது ஆஜர் எதிரிகள் உனக்கு சொந்தமில்லை வெளியே போ என்று சொன்னார்கள். மல்லிகாவை ஜெகதிஸ் மற்றஎதிரிகள் சேர்ந்து அரிவாளை எடுத்து வெட்ட வந்தார்கள். நாங்கள் ஓடி

வந்துவிட்டோம் பின்னர் நான் மல்லிகா, வளர்மதி மூன்று பேரும் மாயனூர் காவல்நிலையம் சென்றோம். அ.சா.1 மல்லிகா புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சி அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி, அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

1. சம்பவத்தன்று கருப்பண்ணன் மகன் ஞானசுந்தரத்தை கோரை அறுப்பதற்காக சம்பவ நடந்த இடத்திற்கு கூட்டிச்சென்றேன் என்றால் சரிதான் அவர் ஓரமாக நின்று கொண்டார். மல்லிகா, 1ம் எதிரி ஜெகதிஸ்வரனிடம் ஏன் இப்படி வீட்டை உடைத்து அராஜகம் செய்தீர்கள் என்று கேட்டதற்கு ஜெகதிசன் அசிங்கமாக திட்டினார் என்றால் சரிதான். 3ம் எதிரி செல்வராஜ் எனது மனைவி வளர்மதியை அசிங்கமாக திட்டினார் என்றால் சரிதான். ராஜேஸ்வரி விளக்குமாறை காண்பித்து மிரட்டினார் என்றால் சரிதான். பிரவின் மல்லிகாவை அரிவாளை காட்டி போட்டு தள்ளிடுவேன் என்று மிரட்டினார் என்றால் சரிதான். 1ம் எதிரி ஜெதிசுவரன் அரிவாளை காட்டி ஓடிவந்தபோது ரஞ்சித்குமாரும், ஞானசுந்தரமும் தடுத்தார்கள் என்றால் சரிதான்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போதிய வாய்ப்பளித்தும் வழக்கறிஞர் குறுக்குவிசாரணை செய்யவில்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்/-திரு.ஆர்.பாக்கியராஜ்**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.